**செ.வெ.எண்: 03** **நாள்: 01.02.2017**

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் சுமார் ரூ1.52 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில் 7 வது வார்டு நவம்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது.

தமிழகஅரசு பொது மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சியில் 7 வது வார்டு நவம்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்ரூ.3.60 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கலையரங்க கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், புங்கினிப்பட்டி, இடையப்பட்டி, ஆலத்துார், தளிஞ்சி, பரம்பூர் ஆகிய கிராமங்களில் தலா ரூ.25 லட்சம் என மொத்தம் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சமுதாய கூடங்கள் மற்றும் ஆணைப்பட்டி, ஆரியூர், மேட்டுப்பட்டி ஆகிய கிராமங்களில் தலா ரூ.8 லட்சம் என மொத்தம் ரூ.24 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உணவு தானிய கிடங்குகள் என ஆக மொத்தம் ரூ.1.526 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிதாக கட்டப்பட்ட சமுதாய கூடத்தில் ஏழை, எளிய பொது மக்கள் தங்களது இல்லங்களில் நடைபெறும் பல்வேறு சுப நிகழ்ச்சிகளை ரூ.2000 மிக குறைந்த வாடகையில் நடத்தி பயன்பெற முடியும். இதே போன்று புதிதாக கட்டப்பட்ட உணவு தானிய கிடங்கின் மூலம் பொது மக்கள் தங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை சிரமமின்றி நியாய விலை கடைகளில் பெறுவதுடன் உணவுப் பொருட்கள் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்படும். இப்பகுதி பொது மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பேருந்து வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் (மா.ஊ.மு), வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராமசாமி, ஆத்மாக்குழுத் தலைவர் திரு.சாம்பசிவம், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சுலைமான்சேட், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாஷியம், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**